நேரு குழந்தைகள் புத்தகாலயம்

# சீதாவும் மின்மினியும்

நீது ஷர்மா

தமிழாக்கம்: டி. மதன் ராஜ்

சித்திரங்கள் : பார்த்தா சென்குப்தா

nbt.india
एकः सूते सकलम्

nbt.india
एकः सूते सकलम्

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா

அந்த ஆட்டின் பெயர் சீதா.

ஒருநாள் சீதாவுக்கு ஒரு மணி கிடைத்தது.

'ஆஹா... எவ்வளவு அழகான மணி...! இதை நான் கழுத்தில் கட்டிக் கொள்வேன்' என்று மகிழ்ந்தது சீதா.

அதைத் தன் கழுத்தில் கட்டிக்கொண்டது.

மணியைக் கண்ட மற்ற ஆடுகள் "ஆஹா... என்ன அழகான மணி" என்று வியந்து பாராட்டின.

சீதா மிகவும் மகிழ்ச்சி அடைந்தது.



nbt.india


nbt.india
एक: सूते सकलम्


nbt.india
एकः शब्दः सर्वोत्तम

சில நாட்கள் கழிந்தன.

ஒருநாள் சீதா புல்தரையில் மேய்ந்து கொண்டிருந்தது.

அப்போது இருட்டத் துவங்கியிருந்தது.

சற்று நேரம் கழித்துப் பார்த்தபோது, அதன் கழுத்தில் இருந்த மணியைக் காணவில்லை.

அழகான மணி தொலைந்து போனதை எண்ணி எண்ணி அழுதது சீதா.



nbt.india

“என்னாச்சு சீதா...? ஏன் அழறே” என்று கேட்டன ஆடுகள்.

“என் கழுத்து மணி காணாம போயிடுச்சு.”

எல்லா ஆடுகளும் வருத்தம் கொண்டன.

அப்போது ஓர் ஆடு சொன்னது – “எனக்கு ஒரு ஐடியா. மின்மினி மீனுவைக் கேட்கலாமே? அது நிச்சயமாக நமக்கு உதவி செய்யும்.”

“ஆமாம்...! நல்ல ஐடியா. ராத்திரி நேரத்தில் அது நல்ல பிரகாசமா வெளிச்சம் தருமே” என்றது இன்னொரு ஆடு.



nbt.india


nbt.india
एकः सूते सकलम्



சீதா யோசித்தது. பிறகு மீனுவைச் சந்திக்கச் சென்றது.

“மீனு மீனு... எனக்கு ஒரு உதவி செய்வாயா?” என்று கேட்டது.

“என்ன வேணும்” என்று கேட்டது மரக்கிளையில் அமர்ந்திருந்த மின்மினி மீனு.

“என்னுடைய கழுத்து மணியைக் காணோம். எங்கேயோ விழுந்துடுச்சு. இருட்டுல தேட முடியலே.”

“ஓ.... அப்படியா...!” என்று கூறிய மீனு யோசித்தது. “ஆனா என்னோட வெளிச்சம் மட்டும் போதாது. பொறு வர்றேன்” என்று சொல்லிவிட்டுப் பறந்து போனது மீனு.

nbt.india एक सूते सकलम्


nbt.india

சில நிமிடங்களில் இன்னும் பல மின்மினிகளுடன் திரும்பி வந்தது மீனு.

எல்லா மின்மினிகளும் ஒன்றாக வந்ததைப் பார்த்தபோது இரவில் சூரியன் வந்துவிட்டது போலத் தெரிந்தது.

எல்லா மின்மினிகளும் நாலா திசைகளிலும் தேடின.

கடைசியில் ஒரு செடியின் கீழே கிடந்த மணியைக் கண்டுபிடித்தன.





nbt.india

கழுத்து மணி திரும்பக் கிடைத்ததில் மிகவும் மகிழ்ந்தது சீதா. மீனுவுக்கும் அதன் கூட்டாளிகளுக்கும் நன்றி கூறியது.

கிண்கிணி-கிணி கிணி என கழுத்து மணி ஒலிக்க மகிழ்ச்சியுடன் நடந்து சென்றது சீதா.

